2017 யூன் 06 ஆம் திகதி இலங்கை உள்ளடங்கலாக தென் ஆசியா மற்றும் அக்கினித் திசை ஆசிய நாடுகளின் குழுவொன்று ஒன்றிணைந்து நிருவிய பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பிற்கு 20 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. இந்த சந்தர்ப்பத்தை நினைவு கூறுவதற்காக கொள்கைகள் கற்கை நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் கெலேகம அவர்கள் பிம்ஸ்டெக் இன் பிரதான செயலாற்றுகைப் பண்புகள் இரண்டான சந்தை ஊள்ளீர்த்தல் மற்றும் அரசாங்கத்தை அடிப்படையாகக் கொண்ட உள்ளீர்த்தல் வலயத்தில் துரிதமான வெற்றி தொடர்பாக சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என வாதாடுகின்றார்.

வாங்காள விரிகுடாப் பிரதேச வலய பொருளாதார உள்ளீர்த்தல்.

சமன் கெலேகம

தெற்கு மற்றும் கிழக்கு ஆசியா உள்ளடங்கலான பங்காள விரிகுடாப் பிரதேசம் இயற்கை வளங்களில் தன்னிறைவான பகுதியாகும். பங்களாதேஷ், சீனா, இந்தியா மற்றும் மியன்மார் (BCIM) மற்றும் பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் மற்றும் இந்தியா (BBNI) ஆகிய நாடுகளின் கூட்டு வலயத்தில் பகுதியளவில் உள்ளடக்குவதுடன் எனினும் முழுமையான வலயமும் உள்ளடக்கப்படுவது, வலய பொருளாதார உள்ளீர்ப்புக்கு வேலைச் சட்டகமொன்று வழங்குவதுடன் பல் பகுதி தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான பங்காள விரிகுடா நாடுகளை உள்ளடக்குவதன் ( BIMSTEC ) காரணமாகும்.

பிம்ஸ்டெக் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஐக்கிய அமேரிக்க டொளர் 2.7 ரில்லியன்களுக்கு, பூகோள சனத்தொகையில் 21 சதவீதமானவர்களுக்கு (1.3 பில்லியன் சனத்தொகை) மற்றும் 7 சதவீதமானவர்கள் வலயங்களுக்கிடையேயான வர்த்தகத்துக்குப் பொறுப்புக் கூறுகின்றனர். பிம்ஸ்டெக் ஊடாக தென் ஆசிய நாடுகளுக்கு கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மார்க்கம் மற்றும் கிழக்கு ஆசிய உற்பத்தி வலையமைப்பு மற்றும் பெறுமதி சேர்ப்புக்கு இணைப்பொன்றை வழங்குகின்றது. இது எதிர்கால ஆசிய மக்களின் அடிப்படையாக மாறியுள்ளது. எனினும், இது வரை முன்னேற்றம் மிகவும் மந்த நிலையாகும்.

1997 இல் ஆரம்பிக்கப்பட்ட பிம்ஸ்டெக் பகுதியளவில் வலயத்தில் இயற்கை வளங்களை மிகவும் சிறந்த முறையில் பயன்படுத்தும் மற்றும் வலயத்தில் உள்ளீர்ப்பினை துரிதப்படுத்தும் பகுதி ரீதியான ஒத்துழைப்பு ஒன்றியமாக ஆரம்பிக்கப்பட்டது. வலய ஒத்துழைப்பானது பொதுவாக பல் வலய ஒத்துழைப்பாக அறிமுகம் செய்யப்படுகின்ற தெரிவு செய்யப்பட்ட துறைகள் பலவற்றுக்கு விஸ்தரிப்புச் செய்வதன் ஊடாக பரவலடைந்துள்ளது. அவ்வாறான ஒத்துழைப்பு அரசாங்கங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் அது சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடாக உருவாகுகின்ற அதிகமாக சுதந்திர வர்த்தக வலயங்களை (FTA) அடிப்படையாகக் கொண்ட உள்ளடக்கத்திற்கு மாற்றமானதாகும். பிம்ஸ்டெக் சுற்றுலாத்துறை கைத்தொழில், மீன்பிடி கைத்தொழில், போக்குவரத்து போன்ற துறைகளின் ஒத்துழைப்பு தொடர்பாக துறைகள் பல இனங் காணப்பட்டுள்ளன.

2004 இல் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்று பற்றிய எண்ணக்கருத்து முதன் முதலாக முன்வைக்கப்பட்ட போது பிம்ஸ்டெக் ஊடாகவும் வர்த்தக சந்தையை அடிப்படையாகக்

கொண்ட உள்ளீர்ப்பு செயற்பாடொன்று கருத்து வைக்கப்பட்டது. 2011 ஆகும் போது முழுமையாக அமுல்படுத்தப்படும் என கருதப்பட்ட போதும், இப்போது அது சாத்தியமடையவில்லை. அனேகமாக அவ்வாறானது பிம்ஸ்டெக் அங்கத்துவ நாடுகள் வலயத்தில் தீர்வை வரி மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமையினால் இன்னும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தேவை பற்றிய கேள்வி எழுப்பப்பட்டமையினாலாகும்.

வலயத்தில் ஒருதலைப்பட்சமான தளர்த்தல் மற்றுமல்லாது தற்பொழுதைய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTA) மற்றும் வலய வர்த்தக நிகழ்ச்சித்திட்டம் ஊடாக இரு பக்க மற்றும் வலய தளர்த்தல்கள் தீர்வை வரிகள் குறைக்கப்பட்டமை என்பது மிக பிரபல்யமாகும். இந்த பிணக்கின் காரணமாக தாமதமடைந்த பிம்ஸ்டெக் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இன்னும் நிகழ்ச்சி நிரலுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு காணப்படுகின்றது.

இங்கு பிம்ஸ்டெக் இன் பிரதான செயலாற்றுகை பண்புகள் இரண்டான வர்த்தக சந்தையினை அடிப்படையாகக் கொண்ட உள்ளீர்ப்பு மற்றும் அரசாங்கங்களை அடிப்படையாகக் கொண்ட உள்ளீர்ப்பு என்பன வலயத்தில் துரிதமான செயலாற்றுகை தொடர்பாக மிக விமரிசையாக பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

சந்தை உள்ளீர்ப்பு தொடர்பாக பிம்ஸ்டெக் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது என்பது மிகவும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தெவையில்லை. இவ்வாறான நிலைமையில் மிகவும் கவனம் செலுத்த வேண்டியதாக இருப்பது சுதந்திர குடிபெயர்வு, தொழில்முயற்சிகளின் சாதகமான சுங்க, போக்குவரத்து வலயத்தின் ஊடாக வர்த்தக இலகுபடுத்தல் தொடர்பாகவாகும். இவ்வாறான செயற்பாடுகள் வலயத்தில் வரியற்ற தடைகள் பலவற்றுக்கு தீர்வாக இருப்பதுடன் வர்த்தகமும் துரிதமடையும்.

அரசாங்கங்களை அடிப்படையாகக் கொண்ட உள்ளீர்ப்பு தொடர்பாக வலய ஒத்துழைப்பு செயற்திட்டங்கள் பல தொடர்பாக கவனம் செலுத்துவதன் ஊடாக தொடர்புகள் மற்றும் மனிதர்கள் மனிதர்களுக்கிடையில் பிரிவுகளை குறைப்பதற்குப் பதிலாக வலய ஒத்துழைப்புடன் கூடிய செயற்திட்டங்கள் பல தொடர்பாக முற்படுதல் புத்திசாலித்தனமாகும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆய்வொன்றான பிம்ஸ்டெக் போக்வரத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் செயலாற்றுகை ஆய்வு வெளிப்படுத்திய டீடீவுஐடுளு ரூ பிரகாரம் வீதி மற்றும் புகையிரத தொடர்புகள், போக்குவரத்து வலயங்கள், பலதரப்பட்ட கேந்திர முக்கியத்துவமான கட்டமைப்புக்கள் (Multi-nodal) போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற துறைகள் ஊடாக பெருந்தெருக்கள், புகையிரத வீதிகளின் இலகுபடுத்தலின் ஊடாக தொடர்புகளை மேம்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சில வேளைகளில் பௌதீக தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு டிஜிடல் தொடர்பு கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். மனிதர்கள் மனிதர்களுக்கிடையில் பிரிவினை வலயத்தில் அரசாங்கங்களுக்கிடையேயான ஒத்துழைப்பின் ஊடாக வான் வழித் தொடர்புகள் மற்றும் சுற்றுலாத்துறை கைத்தொழிலின் ஊடாக மேம்படுத்த முடியும். பிம்ஸ்டெக் சுற்றுலாத்துறை கைத்தொழிலின் மேம்பாடு தொடர்பாக அவ்வாறான தீர்வொன்றாக இருப்பது பௌத்த சுற்றுலாவாகும்.

வலயங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு பயனுறுதியாக வேண்டுமாயின் பிரபல்யமான நிறுவனங்கள் மற்றும் தகவல்கள் இருத்தல் வேண்டும். கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் நான்காகும். பிம்ஸ்டெக் செயலக அலுவலகம், பிம்ஸ்டெக் வர்த்தக மற்றும் கைத்தொழில் சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி, எஸ்கேப் (ESCAP) போன்ற வெளியக பங்காண்மையாளர்கள் மற்றும் பிம்ஸ்டெக் புத்திசாலிகள் சபை வலையமைப்புக்களுடன் பிம்ஸ்டெக் அலுவலர்களின் தொடர்புகள் மற்றும் பிம்ஸ்டெக் சபை.

பிரபல்யமான செயலாளர் அலுவலகமொன்று தேவைப்படுவது தலைவர்களின் சந்திப்புக்கு இடைப்பட்ட காலத்தில் வலயக் குழுக்களின் செயற்பாடுகளை பேணிச் செல்வதற்காகவாகும். சாக் செயலாளர் அலுவலகம் கவர்ச்சிகரமான நிறுவனமொன்றாக இருப்பதுடன் ஆசியான் செயலாளர் அலுவலகத்திற்கு அந்த அமைப்பின் ஆசியான் நிகழ்ச்சித்திட்டம் மிகவும் வெற்றிகரமாக கொண்டு நடாத்துவதற்கு இயலுமை கிடைத்துள்ளது. பிம்ஸ்டெக் செயலாளர் அலுவலகம் ஆசியான் செயலாளர் அலுவலகம் போன்று வலுப்படுத்த வேண்டியதுடன் பிம்ஸ்டெக் நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகவும் முற்போக்கு பாத்திரமொன்றை மேற்கொள்வதற்கு அங்கத்துவ நாடுகளினால் அதிகாரம் வழங்கப்படுதல் வேண்டும். இது மிகவும் முக்கியமாக இருப்பது பிம்ஸ்டெக் அமைப்பிற்கு கட்டளைச் சட்டமொன்று இன்மையினாலாகும்.

பிம்ஸ்டெக் அமுல்படுத்துகின்ற முறைமையின் நிலைமைகள் ஆறு காணப்படுகின்றன. தலைவர்களின் சந்திப்பு, அமைச்சுக்களின் கூட்டங்கள், சிரேட்ட அலுவலர்களின் கூட்டங்கள், விசேட நிபுனர்களின் குழுக் கூட்டங்கள், தொழில்முயற்சி மற்றும் பொருளாதார சபை மற்றும் பிம்ஸ்டெக் செயற்பாட்டுக் குழுக்களை பிரதானமாக டு டீறப ரூ தலைவர்களின் சந்திப்பிலிருந்து விசேட நிபுனர்களின் குழு வரையான அரசாங்கங்களுக்கிடையிலான மட்டத்தில் நிகழ்கின்றன. புதிய பிம்ஸ்டெக் செயலாளர்கள் தலைமையக செயற்பாட்டுக் குழுவின் சகல பணிகள் கையேற்கப்பட்டுள்ளது. பிரதானமாக தொழில்முயற்சிகள் மற்றும் பொருளாதார சபைகள் இலங்கையில் கொழும்பில் அமைந்துள்ள பிம்ஸ்டெக் வர்த்தக மற்றும் கைத்தொழில் சபையுடன் உள்ளடக்கப்படுதல் வேண்டும். இந்தச் சபையானது பிம்ஸ்டெக் செயலாளர்கள் அலுவலகத்துடன் நெருக்கமான தொடர்பினை பேண வேண்டியதுடன் பிம்ஸ்டெக் பொருளாதார உள்ளீர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தை முன்கொண்டு செல்தல் வேண்டும். பிம்ஸ்டெக் தலைவர்களின் சந்திப்பானது வருடாந்தம் நடாத்துவதற்கு CUTS (இந்தியா) மேற்கொண்டுள்ள பிரேரணையை சந்தோசத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டியதுடன் அது பிம்ஸ்டெக் சபையுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

பிம்ஸ்டெக் வலய உள்ளீர்ப்பின் வெளியக நிதிப் பங்களிப்பு ஆசியா அபிவிருத்தி வங்கியாக இருக்க முடியும். பெரிய மீகொங் உப வலயம், உப வலய ஒத்துழைப்பு தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி மேற்கொண்ட பத்திரம் மிகப் பிரபல்யமாகும். பிம்ஸ்டெக் அங்கத்துவ நாடுகளின் உடன்பாட்டுடன் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு BTILS செயற்திட்டத்தை ஆரம்பிக்க முடியும். அதன் பின்னர் செயற்திட்டத்தை பூரணப்படுத்துவதற்கு மேலதிக நிதியினைத் தேடிக் கொள்வது பிரச்சினையொன்றன்று. எனினும், BCIM மற்றும் BBNI முன்னெடுப்புடன் ஒரே விடயத்தை மீளச் செய்தல் தவிர்க்கப்படுதல் வேண்டும். சொற்ப காலத்திற்கு முன்னர் ESCAP பிரேரித்த ஆசிய பெருந்தெரு பிம்ஸ்டெக் தொடர்பின் பகுதியொன்றாக இருக்க முடிவதுடன் அமைப்பிற்கு செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்க முடியும். ஆசிய பொருளாதார உள்ளீர்ப்பின் போது யப்பானின் நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI) பிரதான பாத்திரத்தை மேற்கொண்ட விதத்தில் பிம்ஸ்டெக் பொருளாதார உள்ளீர்ப்பின் போது ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு மற்றும் வேறு வெளியக நிதியினை வழங்குகின்ற நிறுவனங்களின் தலைமையில் தொடர்புகளை மேம்படுத்துவததை துரிதப்படுத்த முடியும்.

இறுதியாக வலய பொருளாதார உள்ளீர்ப்பின் போது புத்திசாலிகளின் சபையின் பாத்திரத்தை பற்றி கவனம் செலுத்தாமல் இருக்க முடியாது. அவற்றுக்கு பிம்ஸ்டெக் அறிவு பங்காளர்களாக மிகவும் முக்கியமான பாத்திரமொன்றை நிறைவேற்ற முடியும். பிம்ஸ்டெக் தொடர்பாக முதலாவது மற்றும் இரண்டாவது படிமுறை (Track 1 and 2) ஆகிய இரண்டிலும் புத்திசாலிகள் சபை வலையமைப்புடன் நிலவுவதாக புரிந்துணர்வொன்று உள்ளது. இந்த படிமுறைகள் இரண்டிற்கும் ஒன்றுடன் ஒன்று செயற்பட முடிவதுடன் வலய ஒத்துழைப்பை அமுல்படுத்துவற்குத் தேவையான கொள்கை ரீதியான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு பிம்ஸ்டெக் சிரேட்ட அலுவலர்கள் மற்றும் தனியார் துறையுடன் வலையமைப்புச் செய்ய முடியும்.

பிம்ஸ்டெக் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தியாவின் ‘‘கிழக்கு நோக்கிப் பார்ப்போம்’’ தாய்லாந்தின் ‘‘மேற்கு நோக்கிப் பார்ப்போம்’’ என்ற கொள்கைகளுடன் சீராக்கமொன்று காணப்பட்டதுடன் இந்த அங்கத்துவ நாடுகள் இரண்டும் தென் ஆசியாவில் ஒரு பகுதி கிழக்கு ஆசியாவின் வளர்ச்சியடைந்து வருகின்ற பொருளாதாரத்துடன் உள்ளீர்ப்படைதலை ஒழுங்கமைப்பை செய்திருப்பது மிகவும் உட்சாகமொன்று காணப்பட்டது. எனினும் அதன் பின்னர் தாய்லாந்து இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொண்டது. இந்தியா மற்றும் ஆசியான் பங்காண்மை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றை அமுல்படுத்தியது. அதன் பிரகாரம் இந்த அங்கத்துவ நாடுகள் இரண்டிலும் ஒழுங்கமைப்பு முன்னர் போன்று ஆழமான உள்ளீர்ப்பு நோக்கிக் கொண்டு செல்வதற்கு முன்னர் காணப்பட்ட உட்சாகம் இல்லை. ஏனைய அங்கத்துவ நாடுகளுக்கு அவ்வளவு அதிகாரம் இல்லை. அவர்கள் பிம்ஸ்டெக் இல் நிரந்தர அங்கத்தவர்களாகும். பிம்ஸ்டெக் மேலும் அங்கத்துவ நாடுகளின் முயற்சியில் அமுல்படுத்தப்படுகின்ற அமைப்பொன்று அன்று. அவ்வாறான நிலைமையொன்றின் கீழ் செயலாளர் அலுவலகத்தின் ஒழுங்கமைப்பை அமுல்படுத்தும் போது மிக முக்கியமாகும். விளக்கமாக பிம்ஸ்டெக் நிகழ்ச்சித்திட்டம் நடாத்திச் செல்வதற்கும் வங்காள விரிகுடா வயல மக்களுக்கு அதன் ஊடாக பயன்களை வழங்குவதற்கும் பிம்ஸ்டெக் செயலாளர் அலுவலகத்தை வலுப்படுத்தல் அங்கத்துவ நாடுகளின் முன்னோடி நடவடிக்கையாக இருத்தல் வேண்டும்.

(2016 பெப்ருவரி 19 ஆம் திகதி டாக்காவில் பிம்ஸ்டெக் செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற உரையின் சுருக்கமாகும்)

இந்த எழுத்தாளர் இலங்கையின் கொள்கைகள் கற்கை நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராவார.